| | | | |
|---|---|---|---|
| Headline | HIV baby recover | | |
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 05 Mar 2013 | Color | Black/white |
| Section | News | Circulation | 45,000 |
| Page No | 6 | Readership | 124,000 |
| Language | Tamil | ArticleSize | 396 cm² |
| Journalist | N/A | AdValue | RM 768 |
| Frequency | Daily | PR Value | RM 2,304 |





# எச்.ஐ.வி. பாதிப்பிலிருந்து குழந்தை மீட்டெடுப்பு!

## மருத்துவ முயற்சியில் வியத்தகு வெற்றி



**சிக்காகோ, மார்ச் 5-** பிறந்தபோதே எச்.ஐ.வி. தொற்றுக் கிருமிகளுடன் பிறந்த குழந்தை ஒன்று, தடுப்பு மருந்துகள் மூலம், எச்.ஐ.வி.யிலிருந்து குணமடைந்திருக்கின்றது என அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் நேற்று தெரிவித்தனர்.

எச்.ஐ.வி.க்கான மருந்துக் கலவைகள் மூலம் இந்தக் குழந்தை குணமடைந்திருப்பதன் மூலம் சிசுக்களிட மிருந்து எச்.ஐ.வி. தொற்றை எப்படி அழிப்பது என்பதற்கான வழிமுறை களை காட்டக்கூடிய மிக முக்கிய மான சிகிச்சையாக இது கருதப்படுகிறது.

மிஸிசிப்பியைச் சேர்ந்த அந்தக் குழந்தையிடமிருந்த எச்.ஐ.வி. கிருமிகள் தொடர்ந்து பல்கி பெருகுவது தற்போது தடுக்கப்பட்டு அதற்கான அறிகுறிகள் முற்றாக நீக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறினர்.

இதே பாணியிலான சிகிச்சைகள், இதர எச்.ஐ.வி. குழந்தைகளையும் குணப்படுத்துமா என்பதை இன்னும் சில ஆராய்ச்சிகளுக்குப் பிறகு தான் உறுதிப்படுத்த முடியும் என்று டாக்டர் டெபோரா பெர்சாட் குறிப்பிட்டார்.

கடுமையான எச்.ஐ.வி. பாதிப்பை எதிர்கொண்டுள்ள குழந்தைகள், இந்தச் சிகிச்சை வழிகுணமடையும் வாய்ப்புகள் இருப்பதாகவே கருதப் படுகிறது. இது உறுதிப்படுத்தப் படுமானால், எச்.ஐ.வியை பொறுத்த வரை அதன் பாதிப்புகளில் இருந்து குழந்தைகளை, காப்பாற்றிவிட முடியும் என அவர் சொன்னார். ஜோன்ஸ் ஹோப் கின்ஸ் மருத்து வமனையைச் சேர்ந்த கிருமியியல் துறை நிபுணரான டெபோரா பெர்சாட், அட்லாண்டாவில் மருத் துவ நிபுணர்கள் மாநாட்டில் இதனை அறிவித்தார்.